
# திராவிடத்தால் வாழ்கிறோம்

771

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## வடமாநிலங்களில் பரவும் பெரியார்!

சென்ற மாதம் தைப்பூச விழாவிற்கு, பழநிக்கு வழிநடையாய் சென்ற பக்தர்களுக்கு இசுலாமியர்கள் வழிநெடுக தண்ணீரும், பாலும், உணவும் கொடுத்து உபசரித்த காட்சிகள் ஊடகங்களை ஆக்கிரமித்தன. இந்த மாதம் ரமலான் மாதம். இசுலாமியர் வீட்டு நோன்புக் கஞ்சியில் தொடங்கி, பிரியாணி வரை பக்கத்து வீட்டுக்குப் பந்தி வைக்கப்படுவது, தமிழ்நாட்டின் பன்னெடுங் கால பழக்கம். பண்டிகைக் காலங்களில் இந்துக்கள் வீட்டுப் பலகாரங்களை இசுலாமியர்களுக்குப் பகிர்ந்துகொள்வதும் சாதாரண நிகழ்வு.

ஆனால், இவையெல்லாம் பல வடமாநிலங்களுக்கு அசாதாரண நிகழ்வுகள். இந்தப் புள்ளியில் இருந்து தமிழ்நாட்டின் இத்தகைய பண்பட்ட கலாச்சாரத்திற்கு யார் காரணம் என்ற கேள்வியுடன், அதற்கு அடித்தளமிட்ட மனிதநேயக்காரர் பெரியார் பதிலைச் சொல்லி விளக்கி, ஓர் காணொலி வெளியிட்டிருக்கிறது பிரவுன் என்லைட்மென்ட் (Brown Enlightenment) என்ற யூடியூப் சேனல். பெரியார் தமிழ்நாட்டுக்கு என்ன செய்தார்? தமிழ்நாடு ஏன் தனித்துவமாக இருக்கிறது என்று, மிக அழகாக எடுத்துச்சொல்லப்பட்ட அந்தக் காணொலி வடமாநிலங்களில் இப்போது தீயாய் பரவிக் கொண்டிருக்கிறது.

“பெரியாரால்தான் வெறுப்புப் பிரச்சாரத்திற்கு இடமில்லாத மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. பெரியார் மத நம்பிக்கைகளைக் கேள்விக்குட்படுத்தினார், ஜாதி மேலாதிக்கத்தை அடித்து நொறுக்கினார், மூடநம்பிக்கைகளை கேள்விகளால் வறுத்தெடுத்தார், ஆணாதிக்கத்தைத் தகர்க்கப் பாடுபட்டார். பெரியார் வெறுமனே சமூக சீர்திருத்தவாதி மட்டுமல்ல, அவர் ஒரு காலகட்டம். அவர் வெறுமனே பேசவில்லை, பகுத்தறிவைப் பரப்ப, சுயமரியாதைச் சிந்தனையை வளர்க்க, சமூகநீதியை விதைக்க, தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் நடந்தார்” என்று அந்த காணொலி, பெரியாரின் ஒரு நூற்றாண்டுப் பணிகளை உச்சிமுகர்ந்து பாராட்டுகிறது.

பெரியாரை தமிழ்நாட்டு மக்கள் மனங்களில் இருந்து அழிக்கப் போராடுகிறது சிறு கூட்டம், ஆனால், தமிழ்நாட்டில் மட்டுமே வீசிக் கொண்டிருந்த அந்தப் ‘பகுத்தறிவுப் புயல்’ இப்போது வடநாட்டிற்குள்ளும் ஊடுருவிக் கொண்டிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### அரிய ஆவணமான படம்!



என்.ஏ.இ.அஜீஸ்கான்

1970 ஆம் ஆண்டு, கலைஞர் பிறந்தநாளின் போது, சிவகங்கை மாவட்டம், இளையான் குடிப்புதூரில் இருந்து எனது நண்பர்கள், கழக உறுப்பினர்களுடன் சென்னை வந்து கோபாலபுரம் இல்லத்தில் கலைஞருக்கு வாழ்த்துத் தெரிவித்தோம். கட்சியின் வளர்ச்சி பற்றிக் கேட்டறிந்தவரிடம் உரையாடி உற்சாகமாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். எனக்கு 85 வயதாகும் நிலையிலும் இந்தப் புகைப்படத்தை அரிய ஆவணமாகப் பாதுகாத்து வருகிறேன். எனது மருமகன் நாசர், கழகத்தின் சிறுபான்மைப் பிரிவுத் தலைவராக இருப்பதும் எனது கழக உணர்வுக்குப் பெருமிதம் அளிக்கிறது.

– **என்.ஏ.இ.அஜீஸ்கான், சேப்பாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நறுக்கு

### `அறிஞர்’ அண்ணா!

1947-ஆம் ஆண்டின் கடைசிக் கட்டத்தில் அண்ணாவின் பெயருடன் ‘அறிஞர்’ எனும் முன்னொட்டு சேர்த்து அழைக்கப்படலாயிற்று. 1948-ஆம் ஆண்டில், பத்திரிகையாளர்கள் தி.சடகோபனும், அ.ந.கனகசபையும் அறிஞர் அண்ணாதுரை எனும் தொகுப்பு நூலை வெளியிட்டனர். 1949-ஆம் ஆண்டு வெளிவந்த ‘நல்லதம்பி’, ‘வேலைக்காரி’ போன்ற திரைப்படங்களில் ‘அறிஞர்’ அண்ணாதுரை எனத் திரையில் காட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்துப் பதிவுகளிலும் ‘அறிஞர்’ எனும் முன்னொட்டு சேர்ந்தே வழங்கப்படலானது.

## உடன்பிறப்பே...

நீரை.மகேந்திரன்

100

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# கும்மிடிப்பூண்டி கி.வேணு

## “வடக்கு எல்லை சிப்பாய்! போர்வாள்!”

“தமிழ்நாட்டின் வட எல்லையில், கழகத்தின் சிப்பாய்! போர்வாள்! என முத்தமிழறிஞர் கலைஞராலும், ‘திருவள்ளூர் மாவட்டத்தின் தீரர்’ இன்றைய கழகத் தலைவர் அவர்களாலும் போற்றப்பட்ட உடன் பிறப்பு வேணு. ஊர் அடையாளத்துடன் சொன்னால், இன்னும் எளிதாக அறிமுகமாவார்; அவர்தான் கும்மிடிப்பூண்டி கி.வேணு. சிறுவயது முதலே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். தனது இறுதிக் காலத்தில் உடல்நலன் பாதிக்கப்பட்ட நிலையிலும், கழகத்திற்காக ஓடோடி உழைத்தவர் எனப் பெயரெடுத்தவர் கி.வேணு.

திருவள்ளூர் மாவட்டத்தில், கும்மிடிப்பூண்டி வட்டம், ஆந்திர மாநில எல்லையை ஒட்டி அமைந்துள்ள பன்பாக்கம்- குருதனம்பேடு என்கிற கிராமத்தில் 1951-ஆம் ஆண்டு பிறந்தவர் வேணு. பெற்றோர் கிருஷ்ணசாமி - அலமேலு அம்மாள். பள்ளிப் பருவச் சிறுவனாக அரசியல் அரங்கத்துக்கு வந்த வேணு, 15 வயது இளைஞராக இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் நின்றவர்.

1967-ஆம் ஆண்டில் கழகம் ஆட்சிக் கட்டிலில் ஏறி இருந்தாலும், கழகக் கொடி பறக்காத ஊர்களும் அப்போது இருக்கத்தான் செய்தன. அப்படி, கிளைக் கழகம் தொடங்கப் படாத ஊராக இருந்த குருதனம்பேடு கிராமத்தில், முதன்முதலில் கழகக் கொடி ஏற்றி, கிளைக் கழகத்தைத் தொடங்கி, அந்தக் கிளையில் முதல் செயலாளராகச் செயல்பட்டார்.

### 22 வயதில் ஒன்றியச் செயலாளர்


18 வயதில் கழக அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கிய வேணு, தனது 22 வயதில் 1973-ஆம் ஆண்டில் முதன்முதலில் கும்முடிப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக தேர்வானார். கழகத்தினரிடம் அவர் கொண்டிருந்த அன்பு, தொடர்ந்து ஐந்து முறை ஒன்றியக் கழகச் செயலாளராக அவரைத் தேர்வு செய்ய வைத்தது.

அதே அன்புதான், திருவள்ளூர் மாவட்டக் கழகம் உருவாக்கப்பட்ட நேரத்தில் அவரை மாவட்டக் கழகச் செயலாளராக்கியது. அந்தப் பொறுப்பில் தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர் வேணு. மாவட்டக் கழகச் செயலாளராக “திருவள்ளூர் மாவட்டத்தைக் கழகத்தின் கோட்டையாக மாற்றியவர் வேணு” என இன்றைய கழகத் தலைவர் அவர்கள், பல மேடைகளில் வேணுவை மனம்விட்டு பாராட்டி இருக்கிறார்.

வேணு அவர்கள் கழகத்தின் தீவிர தொண்டர் என்பது வெறும் பாராட்டு அல்ல; அவர் அன்றைய ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழக முன்னோடி, மதுராந்தகத்தார் என போற்றப்பட்ட மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களின் பட்டறையில் வளர்ந்தவர். அதேநேரத்தில், மதுராந்தகம் ஆறுமுகம், கலைஞரோடு முரண்பட்டு, கழகத்திலிருந்து வெளியேறியபோது, அவரோடு முரண்பட்டு நின்றவர். தனது தாய்வீடு கழகம்தான், ஒரே தலைவர் கலைஞர்தான் என தனது இறுதிமூச்சு வரை வாழ்ந்தவர்.

### மிசா சிறைவாசிகள்!

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர் வேணு. 1976-ஆம் ஆண்டு மிசா சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்போது அவரோடு அடைக்கப்பட்டிருந்த சக சிறைவாசிகள்தான் இன்றைய கழகத் தலைவர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர். “சிறைச்சாலையில் எங்களையெல்லாம் அரவணைக்கக்கூடிய உற்றத்தோழமையாக விளங்கியவர் வேணு” என இன்றைய கழகத்தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.



ஓவியம் : ரவி பேலட்

1975 -ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22-ஆம் தேதி வேணு அவர்களின் திருமணத்தை நடத்தி வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். வேணு அவர்களின் திருமணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான், அதாவது ஆகஸ்ட் 20 அன்று, இன்றைய தலைவர் அவர்களின் திருமணம். “இருவரும் எங்களின் முதலாம் ஆண்டு திருமண நாளை மிசா சிறைவாசியாக சென்னை மத்திய சிறையில் கொண்டாடினோம்” என தலைவர் அவர்கள் தனது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளார். கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில், கைது செய்யப்பட்டு, கலைஞரோடும் சிறைவாசியாக இருக்கும் வரலாற்று வாய்ப்பினைப் பெற்றவர் வேணு.

> **“கும்மிடிப்பூண்டி என்றாலே வேணுதான் என்று சொல்லும் அளவுக்கு, மாவட்ட மக்களிடம் அன்பு காட்டி நற்பெயர் பெற்றவர்!”**

### மக்கள் மன்றத்தில்!

பரந்து விரிந்த திருவள்ளூர் மாவட்டத்தில், ஒவ்வொரு வீட்டிலும் தனது காலடித் தடத்தைப் பதித்தவர் வேணு. அவரது உழைப்பும், போர்க்குணமான செயல்பாடுகளும், மக்களை அரவணைக்கும் ஆற்றலும், 1989-ஆம் ஆண்டில் அவரை கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினராக்கி, கலைஞரின் அவையில் அமர வைத்தது.

அதற்கு முன் 1980-ஆம் ஆண்டில், அவரது 29-வது வயதில் வேட்பாளராகக் களமிறக்கி இருந்தார் கலைஞர். 40 சதவிகித வாக்குகளைப் பெற்று தோல்வியைத் தழுவினார் வேணு. அதன்பின்னர் 91-ஆம் ஆண்டிலும் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். மீண்டும் 1996-ஆம் ஆண்டில் கலைஞர் முதலமைச்சராக அமர்ந்த அவையில், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது தொகுதி மக்களுக்கான நலத் திட்டங்களை உரிமையோடு கொண்டு சென்றார்.

காஞ்சிபுரம் மாவட்ட தி.மு.க. மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினர், உயர்நிலைச் செயல்திட்டக்குழு உறுப்பினர் எனப் பல படிகளில் கழகப் பணியாற்றிய வேணு, மக்கள் பணிகளாக கும்மிடிப் பூண்டி நிலவள வங்கித் தலைவராகவும், மாநில நிலவள வங்கி இயக்குநராகவும், திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவராகவும், மாசுக் கட்டுப் பாட்டு வாரிய நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

### கலைஞர் விருது

திருவள்ளூர் மாவட்டத்தில், அவர் இல்லாத கழக நிகழ்ச்சிகளே கிடையாது எனும் அளவுக்கு கழகப் பணிகளோடு தன்னைப் பிணைத்துக் கொண்டவர், இதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட நிலையில் கூட, அதை மாற்றிக் கொள்ளவில்லை. சென்னையில் நடக்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேணு வந்தால், “உடல்நலத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்” என இன்றைய கழகத் தலைவர் அவர்கள் உரிமையோடு கடிந்து கொண்டதும் உண்டு. இப்படி, தனது உடல்நலத்தைப் பற்றிக்கூட கவலைப்படாமல், தொடர்ந்து கழகத்திற்காக ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்த உன்னதத் தொண்டராகத் திகழ்ந்தவர். கழகப் பணிகளோடும் கலைஞர் பற்றோடும் திகழ்ந்த வேணு அவர்களைப் பாராட்டும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் 2021-ஆம் ஆண்டிற்காக முப்பெரும் விழா விருதுகளில், ‘கலைஞர் விருது’ வழங்கிச் சிறப்பித்தார் இன்றைய கழகத் தலைவர்.

‘எத்தனை இடர் வரினும் எதிர்த்து நிற்கும் அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர்’ எனக் கழகத்தினர் போற்றிய வேணு 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 21-ஆம் தேதி தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார்.

“கும்மிடிப்பூண்டி என்றாலே வேணுதான் என்று சொல்லும் அளவுக்கு, மாவட்ட மக்களிடம் அன்பு காட்டி நற்பெயர் பெற்றவர்” என இரங்கல் வெளியிட்ட கழகத் தலைவர் அவர்கள், “என்னை நானே தேற்றிக் கொள்கிறேன்” என கண்ணீர் வடித்தார். “அண்ணனின் கழகப்பணியும் - மக்கள் பணியும் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும். அண்ணன் வேணுவின் புகழ் ஓங்கட்டும்” என்றது இளைஞர் அணிச் செயலாளரின் இரங்கல் குறிப்பு. அது, தலைமுறைகள் கடந்தும் வேணு போன்ற மூத்தவர்களின் உழைப்புக்கு மரியாதை செய்யும் கழகத்தின் பண்பினை வெளிப்படுத்தியது. அதுதான், கழகம் என்றென்றும் உயர்த்திப்பிடிக்கும் உணர்வு.

...துடிக்கும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131